Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 103

வெள்ளிக்கிழமை
08 மார்ச் 2024

மாசி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"நாட்டில ஆயிரத்தெட்டு பிரச்சினை கிடக்க உவைக்கு ஆதிலிங்கேஸ்வரரோட சொறியிறதே வேலையாப் போட்டுது"

சிவராத்திரி ஏற்பாட்டுக்காகச் சென்ற

# வெடுக்குநாறிமலை ஆலயத்தின் பூசகரை கைது செய்தது பொலிஸ்

## ஆலய வளாகத்தில் பதற்றம்
## பூசைப்பொருள்கள் பறிமுதல்
## ஆலயத்துக்குச் செல்லவும் தடை

முல்லைத்தீவு, மார்ச் 8

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடுகளுக்கான முன்னேற்பாட்டுக்காகச் சென்ற ஆலயத்தின் பூசகர் உள்ளிட்ட இருவர் பொலிஸாரால் நேற்று இரவு கைதுசெய்யப்பட்டனர். 11

## திடீரென அகற்றப்பட்ட சுழிபுரம் புத்தர் சிலை!

யாழ்ப்பாணம், மார்ச் 8

சுழிபுரம் சவுக்கடிப் பிள்ளையார் ஆலயத்திற்குப் பின்புறமாக கடற்படையினரால் புதிதாக வைக்கப்பட்ட புத்தர் சிலை நேற்று வியாழக்கிழமை மாலை திடீரென அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது. புத்தர் சிலை வைக்கப்பட்டமைக்குக் கிராம மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்ததுடன் சமூக ஊடகங்களிலும் கடும் கண்டனங்கள் வெளியிடப்பட்டு வந்தன. இந்த நிலையில் நேற்று அந்தப் புத்தர்சிலை கடற்படையினரால் திடீரென அகற்றப்பட்டது. இது குறித்து இலங்கைக் 12

## திருச்சி முகாமில் மோசமான சூழல்!

### கடவுச்சீட்டு பெறச்செல்ல முருகனை அனுமதிக்குக

உயர் நீதிமன்றத்தில் நளினி மனு

சென்னை, மார்ச் 8

திருச்சி முகாமில் மோசமான சூழல் நிலவுகின்றது. அங்கு முருகனின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. ஆதலால், முருகன் நாட்டைவிட்டு வெளியேறும் வகையில் கடவுச்சீட்டுப் பெறுவதற்காக இலங்கைத் தூதரகத்துக்கு 11



## வீட்டுக்கு வீடு வெள்ளை ஈ!

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்ப்பாணத்திலும் வடக்கு மாகாணத்தின் இதர பகுதிகளிலும் தென்னை உள்ளிட்ட பயன்தரு மரங்கள் வெள்ளை ஈக்களின் தாக்கத்தால் பாதிக்கப்படுகின்றன என்று 11

புத்தகச்சுமை காரணமாக

## 70 வீத மாணவர்கள் முதுகுவலியால் அவதி

கொழும்பு, மார்ச் 8

புத்தகப்பைகளின் சுமை காரணமாக 70 வீதமான மாணவர்கள் முதுகுவலியால் அவதிப்பட்டு வருகின்றனர் என்று சமுதாய மருத்துவ நிபுணர் கபில ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் புத்தகப்பைகள் வடிவமைக்கப்படவேண்டும். புத்தகப் பைகளின் அதீத சுமை காரணமாக நாட்டில் பல்லாயிரம் மாணவர்கள் பல்வேறு பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். 70 வீதமான மாணவர்கள் முதுகுவலியால் அவதிப்படுகின்றனர். 35 வீதமான மாணவர்களுக்கு எலும்பு மற்றும் தசை 11

## சென். ஜோன்ஸ் வலுவான ஆரம்பம்

யாழ். மார்ச் 8

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான வடக்கின்போர் கிரிக்கெட் ஆட்டத்தில், முதல் நாள் முடிவில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிவலுவான ஆரம்பம் கண்டுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய 12

புலி விமர்சனத்தின் தொடர்ச்சியாக

## சாணக்கியன் மீது தாக்குதல் முயற்சி!

ரோஹித மீது குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 8

என்னைப் புலி என்று விமர்சித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன, பிரதமரின் அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருக்கும்போது 'ஏன் சிங்கள பிரத 11

யாழ்ப்பாணம் மாவட்ட

## பதில் மாவட்டச்செயலராக மருதலிங்கம் பிரதீபன்!



யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்ப்பாணம் மாவட்ட பதில் மாவட்டச் செயலராக, யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலராகப் பதவிவகித்த மருதலிங்கம் பிரதீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலராகப் பதவிவகித்த அம்பலவாணர் சிவபாலசுந்தரன் நேற்றுடன் ஓய்வு பெற்றுச் சென்றார். அவருக்கான பிரிவுபசார நிகழ்வு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் துணை நிகழ்வாக, யாழ்ப்பாணம் மாவட்ட பதில் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தடுப்பில் உள்ள மூவரையும் விடுவியுங்கள்

## சிறீதரன் எம்.பி. வலியுறுத்து



**கொழும்பு, மார்ச் 8**

**இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு, இந்தியச் சிறையில் உள்ள றொபேர்ட் பயஸ், முருகன், ஜெயக்குமார் ஆகியோர் அவர்களின் உறவுகளுடன் சொந்த மண்ணில் வாழட்டும். அதற்குரிய நடவடிக்கையை இந்தியப் பிரதமர், தமிழக முதல்வர் மற்றும் இலங்கை ஆட்சியாளர்கள் எடுக்கவேண்டும்.**

-இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ். சிறீதரன் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:-

இந்தியச் சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் விடுதலையாகியும் வீடு திரும்பமுடியாது உயிர்நீத்த சாந்தனுக்கு இந்த இடத்தில் அஞ்சலி செலுத்துகின்றேன்.

சாந்தன் 20 வயதில் சென்று 53 வயதைக் கடந்து சடலமாக வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிறப்புமுகாமிலுள்ள றொபேர்ட் பயஸ், முருகன், ஜெயக்குமார் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டு, அவர்களின் குடும்பத்துடன் வாழ வழி செய்ய வேண்டும் என்று இந்தியப் பிரதமர், தமிழக முதல்வர் மற்றும் இலங்கை அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (எ-44)

# உணவை சுருக்கும் நிலையில் இப்போதும் நாட்டு மக்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 8

பெரும்பாலான குடும்பங்கள் மூன்றுவேளை உணவை இரண்டு வேளையாக இப்போதும் மட்டுப்படுத்திக்கொண்டுள்ளன. ஆனால், நாடு இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டது என்று அரசு குறிப்பிடுகிறது.

-இவ்வாறு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்ற அமர்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொருளாதாரப் பாதிப்பால் நாட்டில் இறப்பு வீதம் உயர்வடைந்து, பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளது. பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீட்சிப் பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அரசு குறிப்பிடுகிறது. தேர்தலுக்கான அறிகுறிகள் இடம்பெறவுள்ள நிலையில் மின்கட்டணம், அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை குறைக்கப்படுகிறது. மக்களை ஏமாற்றமுடியாதுஎன்பதை அரசாங்கம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும் - என்றார். (ச-இ)

# மின்கட்டணக் குறைப்பு விவரங்கள் வெளியாகின

கொழும்பு, மார்ச் 8

இலங்கையில் மின்கட்டணம் சுமார் 20 வீதத்துக்கும் மேற்பட்ட அளவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், கட்டணக் குறைப்புத் தொடர்பான முழு விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி இதுவரை 30 அலகுகளுக்கான கட்டணமாக, ஓர் அலகுக்குத் தலா 12 ரூபா அறவிடப்பட்ட நிலையில் அந்தக் கட்டணம் இனி 8 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. 31 தொடக்கம் 50 அலகுகளுக்கான கட்டணமாக, ஓர் அலகுக்குத் தலா 30 ரூபா அறவிடப்பட்ட நிலையில் அந்தக் கட்டணம் இனி 20 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

50 தொடக்கம் 60 அலகுகளுக்கான கட்டணமாக, ஓர் அலகுக்குத் தலா 38 ரூபா அறவிடப்பட்ட நிலையில் அந்தக்கட்டணம் இனி 25 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

61 தொடக்கம் 90 அலகுகளுக்கான கட்டணமாக, ஓர் அலகுக்குத் தலா 41 ரூபா அறவிடப்பட்ட நிலையில் அந்தக்கட்டணம் இனி 30 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

90 தொடக்கம் 120 அலகுகளுக்கான கட்டணமாக, ஓர் அலகுக்குத் தலா 59 ரூபா அறவிடப்பட்ட நிலையில் அந்தக்கட்டணம் இனி 50 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

120 தொடக்கம் 180 அலகுகளுக்கான கட்டணமாக, ஓர் அலகுக்குத் தலா 59 ரூபா அறவிடப்பட்ட நிலையில் அந்தக்கட்டணம் இனி 50 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

180க்கும் மேற்பட்ட அலகுகளுக்கான கட்டணமாக, ஓர் அலகுக்குத் தலா 89 ரூபா அறவிடப்பட்ட நிலையில் அந்தக் கட்டணம் இனி 75 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. (ம-6)

# முருகன், பயஸ், ஜெயக்குமாரை நாட்டுக்கு அனுப்பவேண்டும்

## ஜனநாயகப் போராளிகள் கட்சி கோரிக்கை

வவுனியா, மார்ச் 8

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள றொபேர்ட் பயஸ், முருகன், ஜெயக்குமார் ஆகியோர் தாயகம் திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று எமது மக்கள் சார்பாக இந்திய மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவித்தார் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன்.


இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

ஈழத்தமிழர்களது நியாயங்களையும் அறைகூவல்களையும் இந்தியா புரிந்துகொள்ள வேண்டும் என தமிழினம் கருதுகிறது.

இந்திய நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்ட ஈழத்தமிழர்களான முருகன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் விரைந்து தாயகம் திரும்ப ஆவன செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (எ-110)

# சாந்தனின் மரணம் திட்டமிட்ட கொலை

## ஆய்வாளர் யோதிலிங்கம் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 8

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டு திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சாந்தனின் மரணம் திட்டமிட்ட கொலையாகும். ராஜீவ்காந்தி கொலை தொடர்பில் மீள் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்று அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மத்திய அரசு, நீதிமன்றம் விடுதலை செய்த பின்னர் அவர்களை விரைவாக இலங்கைக்கு அனுப்புவதற்கான செயற்பாட்டை முன்னெடுத்து இருக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற சிறப்பு முகாம் சாந்தனை கவனமாகப் பார்த்திருக்கவேண்டும். இந்தப் பொறுப்பிலிருந்து தமிழ்நாடு அரசு நழுவி இருக்கிறது.

இலங்கை அரசும் தமிழ் அரசியல் தலைமைகளும், சாந்தன் இலங்கைப் பிரஜை என்ற ரீதியில் அவரை நாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய மூவரையும் பாதுகாப்பாகக் கொண்டுவர வேண்டிய தேவை இருக்கிறது. தமிழ் அரசியல் தலைவர்கள் அதைப் பொறுப்பு எடுத்து கையாளவேண்டும் -என்றார். (எ-100)

# தேர்தலுக்குத் தயாராகும் அரசியல்கட்சிகள்

கொழும்பு, மார்ச் 8

திட்டமிட்டபடி ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு பிரயத்தனம் எடுத்துவரும் நிலையில், கட்சிகள் பரப்புரை நடவடிக்கைகளில் மும்முரமாக களமிறங்கியுள்ளன என்று அரசியல்வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி, எதிர்வரும் 10 ஆம் திகதி குளியாப்பிட்டியில் இடம்பெறும் மக்கள் சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார்.

மறுபுறம் ஐக்கிய மக்கள் சக்தி அவ்வப்போது தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை முன்னெடுத்துவருவதுடன், மக்கள் சந்திப்புகளிலும் தீவிரம் காட்டியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலை வர் பஸில், அமெரிக்காவில் இருந்து இலங்கைக்குத் திரும்பி யுள்ளார். மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் விரைவில் வடமாகாணத்துக்கான பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலையொட்டிய கட்சிகளின் நகர்வுகள் உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# கூட்டம்

கிளிநொச்சி, மார்ச் 8

வரலாற்றுச் சிறப்புமிக்க புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் விழாவின் முன்னாயத்தங்கள் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி பதில் மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன்தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்தப் பொங்கல் உற்சவம் நடைபெறவுள்ளது. (ப-13)

# சர்வதேச வர்த்தகத்தளம் சவூதிஅரேபியா அனுமதி

450 பல்தேசியக் கம்பனிகளுக்கான பிராந்தியத் தலைமையகத்தை சவூதிஅரேபியாவில் திறப்பதற்கு சவூதி அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இது சவூதிஅரேபியாவின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையாக அமையும் என்று முதலீடுகளுக்கான அமைச்சர் பொறியியலாளர் காலித் பின் அப்துல் அஸீஸ் அல் பாலி தெரிவித்துள்ளார்.

இந்தத் தளம் சவூதிஅரேபியா தலைநகர் ரியாத்தை மையப்படுத்தி உருவாகும். ஆசிய வட்டகையில் சிங்கப்பூர் நீண்டகாலமாகத் திறந்த சந்தையாக இருந்துவரும் நிலையில் மத்திய கிழக்கில் ஐக்கிய அரபு இராச்சியமும் சர்வதேச வர்த்தகத்துக்கு கதவுகளைத் திறந்துவிட்டுள்ளது. இந்த நிலையில் சவூதி அரேபியாவும் ஐக்கிய அரபு இராச்சியத்தைப் பின்பற்றி தனது நாட்டை அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கியின் சுயாதீனம் சம்பள அதிகரிப்புக்கானதல்ல!

## ஆளுநர் உட்பட உயர் அதிகாரிகள் கட்சித் தலைவர்களிடம் 'குட்டு' வாங்கினர்

**கொழும்பு, மார்ச் 8**

**சுயமான தீர்மானத்துக்கு அமைய பணியாளர்களின் சம்பளத்தை அதிகரித்தமை தொடர்பில் மத்திய வங்கியின் உயர் அதிகாரிகளிடம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கடும் அதிருப்தி வெளியிடப்பட்டது.**

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மத்திய வங்கி சட்டவரைவில் சுயாதீன தீர்மானமாக சம்பளத்தை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள் இருந்தபோதிலும், உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய அதை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்ற காரணத்தால் சட்டவரைவிலிருந்து அது நீக்கப்பட்டுள்ளதாகக் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட அதிகாரிகள், சட்டத்தின் 5, 8 மற்றும் 23ஆவது பிரிவுகளில் அதற்கான ஏற்பாடுகள் இருப்பதாகவும், நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை தொடர்பில் சகல செலவினங்களையும் ஈடுசெய்வதற்கு மத்திய வங்கியின் நிதியத்தைப் பயன்படுத்த சட்டத்தில் இடமிருப்பதாகவும் சுட்டிக்காட்டினர். புதிய சட்டத்தில் மத்திய வங்கியின் பணிகளை சுயாதீனமாக மேற்கொள்ள ஏற்பாடுகள் உள்ள போதிலும், சுயாதீன தீர்மானத்தின் அடிப்படையில் சம்பளத்தை அதிகரிக்க எந்தவொரு இடத்திலும் அதிகாரம் இல்லையெனவும், இறுதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளதாகவும் கட்சித் தலைவர்கள் பதிலளித்தனர்.

இந்தச்சம்பளஅதிகரிப்பின்காரணமாக மாதமொன்றுக்கு மேலதிகமாக ஏறத்தாழ 232 மில்லியன் ரூபா ஒதுக்கப்படுவதாகவும் இங்கு தெரியவந்தது. (ஒ-44)

# யாழ்.மாநகரசபை நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்.மாநகரசபையால் வரியிறுப்பாளர்களின் நன்மைகருதி முன்னெடுக்கப்படவுள்ள நடமாடும் சேவை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 3 மணிவரை பாஸ்ஷ்யூர் அந்தோனியார் ஆலயபொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. 19ஆம், 20 ஆம் வட்டாரங்களுக்கான ஆதனவரி அறிவித்தல் விநியோகித்தல், பெயர்மாற்ற விண்ணப்பப்படிவம் வழங்கல், சைக்கிள் உரிமம் உள்ளிட்ட சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் அனைத்து வட்டாரங்களினதும் ஆதனவரி நிலுவைகள், நடப்பாண்டு ஆதனவரி, தண்ணீர்க்கட்டணம் மற்றும் வியாபார வரி என்பவற்றைச் செலுத்தலாம் என்றும் யாழ்.மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)

# இலங்கையில் மீண்டும் 'ஷெல்'

'ஷெல்' நிறுவனம் 63 வருடங்களின் பின்னர் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் இலங்கையில் மீண்டும் எரிபொருள் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நிறுவனம் 1961 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தால் அரசுமையாக்கப்பட்டது.

அதன்பின்னர் அந்த நிறுவனம் ஆசியாவில் தமது செயற்பாடுகளை இலங்கையிலிருந்து அகற்றி சிங்கப்பூரில் ஆரம்பித்து, தற்போது சிங்கப்பூரில் பெரும் நிறுவனமாக மாறியுள்ளது.

தற்போது ஷெல் நிறுவனம் இலங்கையின் எரிசக்தி துறையில் மீண்டும் இணைந்து, எதிர்வரும் 19ஆம் திகதி கொழும்புத்துறைமுகத்துக்குள் பிரவேசிக்கவுள்ளது. (எ-இ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 8

சாவகச்சேரி, சங்கத்தானை வைரவசுவாமி, கந்தசுவாமி ஆலயத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு இன்று சிறப்புச் சொற்பொழி இடம்பெறவுள்ளது.

ஆலயத் தலைவர் கு.சதாசிவமூர்த்தி தலைமையில் நடைபெறும் நிகழ்வில், 'திருநெறிவிளக்கம்' பற்றி ஆசிரியர் சி.ஜெயகணேசன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ச)

# காணிகள் விடுவிப்புக்காக தபாலட்டைப் போராட்டம்!

பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் திணைக்களங்கள் வசமுள்ள மக்களின் பூர்வீகக் காணிகளை விடுவிக்கக்கோரி ஜனாதிபதி செயலகத்துக்கு தபாலட்டை அனுப்பும் போராட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் ஜெயபுரம் பொதுமண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வடக்கிலுள்ள 5 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் காணிகளை விடு விக்கக் கோரி 'நிலத்தை இழந்த மக்களின் குரல்' எனும் தலைப்பில் முன்னெடுக்கப்படும் தபாலட்டை அனுப்பும் போராட்டம் மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாகவே கிளிநொச்சியில் நடைபெற்றது. (ஒ-113)

# முதியோர் இல்லத்தின் செயற்பாட்டுக்குத் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 8

வல்வெட்டித்துறையில் இயங்கிய முதியோர் இல்லத்தின் செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த முதியோர் இல்லம் எந்தவித அனுமதியும் பெறாது இயங்குகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸின் பணிப்புரைக்கு அமைய ஆளுநரின் செயலாளர், பருத்தித்துறைப் பிரதேச செயலருக்குக் கடிதம் மூலம் இது தொடர்பாக அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் இயங்கும் 'அபயம்' 24 மணிநேரக் குறைகேள் வலையமைப்புக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பின்னர் பருத்தித்துறைப் பிரதேச செயலரிடம் இருந்து பெறப்பட்ட களப் பயண அறிக்கைக்கு அமைய இல்லச்செயற்பாடுகளுக்கும்தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், முதியோர் இல்லம் தொடர்பில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கவும் பணிக்கப்பட்டுள்ளது. (எ-27-66-26)

# ப தினம் தெரியுமோ?

ஜப்பானில 'ட்ரபிக்' பொலிஸ்காரர் தங்களோட மோப்பநாயளையும் பணியில் கூட்டிக்கொண்டு போறவையாம். வேகமாப் போற வாகனங்களில ஏதும் போதைப்பொருள், கடத்தல் சாமான்கள் இருந்தால் இந்த நாயள் காட்டிக்குடுத்திடும் இப்பிடி தங்களோட வாற நாயளுக்குத் தனியா 'ரொய்லெட்டும்' கட்டிக் குடுத்திருக்கினம். தங்கட டியூட்டி முடிஞ்சவுடன அந்த மோப்பநாயள் தங்கடபாட்டில அந்த ரொய்லெட்டுக்கு போய், ஒண்டுக்கு ரண்டுக்கு இருந்திட்டு வருகுதுகளாம். ஜப்பான்காரர் அப்பிடியெண்டால், எங்கட 'ஜப்னாகாரர்' மட்டும் லேசுப்பட்ட ஆக்களோ? இஞ்சையும் ஜப்பானுக்குப் போட்டியா நாயளுக்கெண்டு பென்னாம்பெரிய ரொய்லெட் ஒண்டு கட்டியிருக்கினம்.

'நாயளுக்கெண்டு தனி ரொய்லெட்டோ? அப்பிடி நாங்கள் கேள்விப்படவேயில்லையே' எண்டு நீங்கள் தலையைச் சொறிவியள். கனக்க யோசிக்காதையுங்கோ. கொக்குவில் ரெயில்வே ஸ்ரேசன் தான் யாழ்ப்பாணத்து நாயளுக்கு எண்டு கட்டியிருக்கிற 'பொது மலசலகூடம்'. இலங்கையில எந்தவொரு ஸ்ரேசனிலலையும் இல்லாதளவுக்கு இந்த ஸ்ரேசனில எங்க பார்த்தாலும், நாயளின்ர கழிவுகள் தான். கால்வைக்கிற இடமெல்லாம் 'கண்ணி வெடிதான்'. தப்பித்தவறி கீழ பாக்காமல் காலை வைச்சியளோ பிறகு, இழுத்து இழுத்து நடந்து போய் எங்கையாவது காலைக் கழுவினால் தான் ஒழுங்கா நடக்க ஏலும். அப்ப நீங்கள் கையில ரெண்டு அஞ்சு லீற்றர் தண்ணிப்போத்தலோட கொக்குவில் ஸ்ரேசனுக்குப் போறதுதான் பாதுகாப்பு. அதைவிட கையில கொண்டுபோற சூட்கேஸ், பாக் எண்டு ஒண்டையும் மறந்தும் கீழ வைச்சிடாதையுங்கோ. பிறகு ரெயின் முழுக்க நாறத்தொடங்கிடும். அந்தளவுக்கு நாய்க்கழிவுகள் உங்கட கால் எப்பதங்களில படுமெண்டு அகலிகை மாதிரி அந்த இடம் முழுக்க ஏங்கிக் கொண்டிருக்குதுகள்.

இப்பிடி நாயளின்ர மலக்காடா இந்த ரெயில்வே ஸ்ரேசன் மாறினதுக்கு ஆர் காரணம் எண்டு தெரியேலை? இந்த ஸ்ரேசன் நல்லூர்ப் பிரதேச சபைக்குள்ள தான் வருகுது. சிலவேளை அவை ரெயில்வே ஸ்ரேசனுக்குப் போய் கிளீன் பண்ணக் கூடாதெண்டு ஏதும் சட்டம் இருக்கோ தெரியேலை. அப்பிடியெண்டால், ஸ்ரேசன்காரராவது ஒராளைப் போட்டு உதுகளை கிளீன் பண்ணலாமெல்லோ. கம்பஸ் பெடிபெட்டையள், வெளிமாவட்டங்களுக்கு வேலைக்குப் போய்வாறவை எண்டு இந்த ஸ்ரேசனில சனத்துக்கும் குறைவில்லை. அதைமாதிரி நாயளுக்கும் குறைவில்லை.

உரியவை கொஞ்சம் கவனிச்சு, உந்தக் கழிவுகளை கிளீன் பண்ணினால் தான், மணம் குணம் நிறைஞ்ச ஸ்ரேசன் எண்டபேரை இனியாவது மாத்தலாம். அப்பிடியில்லாமல் கவனிக்காமல் விட்டினமெண்டால், வெளிநாடுகளில இருந்தும் நாயள் ரொய்லெட் போறதுக்கு, கொக்குவில் ஸ்ரேசனுக்கு வந்தாலும் ஆச்சரியப்படமுடியாது பாருங்கோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
20 . 06 . 1966

மறைவு
05 . 03 . 2024

## நாகேஸ்வரன் சாந்தினி

(யாழ். கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர்)

கொழும்புத்துறை மூன்றாம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகேஸ்வரன் சாந்தினி (யாழ்.கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர்) கடந்த 05.03.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் கந்தசாமி - சிவானந்தமணி தம்பதியினரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - சிவகொங்கை தம்பதியினரின் மருமகளும், நாகேஸ்வரனின் பாசமிகு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.03.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 358 8551

இல 10, 3 ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

(CS/54285) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
26 . 04 . 1926

மறைவு
07 . 03 . 2024

## அமரர் நமசிவாயம் மூத்தபிள்ளை

(அம்மா அக்காள்)

குடியிருப்பு மந்துவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் பெரிய நாவலடி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் மூத்தபிள்ளை (07.03.2024) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் நமசிவாயம் அவரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னம்பலம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நாகம்மா, சிவபாக்கியம், இராசரத்தினம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற விஷ்வலிங்கம், குணரத்தினம், யோகேஸ்வரி, நடேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், திருலோகநாதன், இராஜேஸ்வரி, திருலோகநாயகி, இராஜேஸ்வரன், மகிந்தன், தயாநிதி, தயாழினி, கீர்த்தனா, தர்மினா, கதுசன், தனுசன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (08.03.2024) வெள்ளிக்கிழமை ந.ப 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (பெரியநாவலடி கொடிகாமம்) நடைபெற்று பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் தகனக் கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்புராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கொடிகாமம்.

(CR 42073) V-1

## மகளிர் தினம்

சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் வட மாகாண மகளிர் விவகாரஅமைச்சால், சர்வதேச மகளிர் தினவிழா நேற்று முன்தினம் புதன் கிழமை நடத்தப்பட்டது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துசேன கலந்து கொண்டார். (ப-9)

## கோபா தலைவர் லசந்த!

கொழும்பு, மார்ச்8

நாடாளுமன்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) புதிய தலைவராக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்து வப்படுத்தும் உறுப்பினர்களால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் முதலாவது கூட்டம் நேற்று இடம்பெற்றபோதே அவர் தெரிவுசெய்யப்பட்டார்.

இதன்போது, லசந்த அழகிய வண்ணவின் பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வழிமொழிந்தார். (ம-44)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். பிணக்குகள் நீங்கும்.

**இடபம்:** தாயாரின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். பணவரவும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மனவருத்தம் ஏற்படக் கூடும். பிள்ளைகளால் வீண் செலவுகள் ஏற்படும். சிவபெருமானை வழிபடுவது சிறப்பு.

**மிதுனம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் சில சிரமங்கள் ஏற்படும்.

**கடகம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவு கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றி நிம்மதி பெறுவீர்கள். திடீர் ஆதாயம் கிடைக்கக்கூடும். விநாயகரை வழிபடுவது நன்மைகளை அதிகரிக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். சுபநிகழ்ச்சி ஏற்பாடாகும். வீண் அலைச்சலுடன் உடல் அசதியும் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் கனிவான அணுகு முறை அவசியம்.

**கன்னி:** நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். தொடங்கும் காரியம் சாதகமாக முடியும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விடயத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம் :** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். ஆதாயம் கிடைக்கும். செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முயற்சிகள் சாதகமாக முடியும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்ய வேண்டாம்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு குடும்பம் தொடர்பான பணிகளுக்காகச் சற்று அலைச்சல் ஏற்படும். சிலருக்கு எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தடைகள் விலகும்.

## பெரிய வெங்காயம் விலை உயரும்!

கொழும்பு, மார்ச் 8

பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு பாகிஸ்தான் தடைவிதித்ததால் புத்தாண்டு பண்டிகையின்போது பெரிய வெங்காயத்தின் விலை கிலோ 800 ரூபாவரையில் உயரும் என்று வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்தின் தலையீடு தேவை. அதேவேளை வளைகுடா பகுதிக்கான பெரிய வெங்காய ஏற்றுமதியை பாகிஸ்தான் நிறுத்தியுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ரணில் கொடுக்கும் 'அல்வா'

இலங்கைப் படைத்தரப்பால் கையகப்படுத்தப்பட்டுள்ள தங்கள் காணிகளுக்கு எப்போது விடிவு கிடைக்கும் என்று காத்திருக்கும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு மீண்டும் 'அல்வா' கொடுக்க முயற்சிக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதோ காணி விடுவிப்பு, இதோ காணி விடுவிப்பு என்று கூறி, தமிழர் காதில் பூச்சுற்றிக்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இப்போது நடைமுறைக்குச் சாத்தியமற்ற புதிய கதை ஒன்றுடன் தமிழ் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்திருக்கின்றார். போர் முடிந்து ஒரு தசாப்தகாலம் கடந்துள்ள போதும், தேசியப் பாதுகாப்பு என்ற சொற்பதத்தைப் பயன்படுத்தி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் வளம் கொழிக்கும் காணிகள் இலங்கைப் படைத்தரப்பால் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன – கையகப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தக் காணிகளின் சட்ட உரித்துடைய தமிழ் மக்கள் நாடோடிகளாக வாடகை வீடுகளிலும், வாழ்வாதாரமும் இன்றி அல்லாடிக்கொண்டிருக்க, அந்தக் காணிகளில் படைத்தரப்பு விவசாயம், வியாபாரம் என்று பணம் பார்த்துக்கொண்டிருக்கின்றது. போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்ட 2009 ஆம் ஆண்டு முதல் வடக்கு - கிழக்குத் தமிழ் மக்கள் இராணுவத்தின் வசமுள்ள தங்கள் காணிகளை விடுவிக்கவேண்டும் என்று கோரி வருகின்றனர், போராட்டங்களை நடத்தி வருகின்றனர். பகுதியளவில் தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தாலும், தமிழ் மக்களின் பயன்மிக்க காணிகள் இன்னமும் இராணுவத்தின் வசமே இருக்கின்றன.

நல்லாட்சிக் காலத்தின் பிரதமர்–தற்போதைய ஜனாதிபதி –ரணில் விக்கிரமசிங்க வடக்குக்கு வரும் சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களின் காணிகள் விடுவிப்புத் தொடர்பில் பேசத்தவறுவதில்லை. ஆனால், இதுவரை காணி விடுவிப்பு என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கானல் நீராகவே இருக்கின்றது. இதுவரை காணிகள் விடுவிக்கப்படும் என்று தமிழ் மக்களை ஏய்த்துக்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்றுமுன்தினம் தன்னைச் சந்தித்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம், காணி விடுவிப்பு என்பது உடனடிச் சாத்தியமற்றது என்று அடித்திருக்கின்றார். அதுமட்டுமல்லாமல், இராணுவத்தின் வசமுள்ள காணிகளின் உரிமையாளர்களுக்கே அந்தக் காணிகளைக் குத்தகைக்கு வழங்கலாம் என்ற பொருத்தமற்ற யோசனை ஒன்றை முன்வைத்து, காலத்தைக்கடத்தி –தமிழ் மக்களை ஏமாற்ற முயல்கின்றார். தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையில் கையகப்படுத்தப்பட்டிருக்கும் காணிகளை குத்தகைக்கு வழங்க முடியும் என்றால், அவற்றை ஏன் உரிமையாளர்களுக்கு வழங்கமுடியாது?

நாட்டின் மீட்பராக தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் ரணில் விக்கிரமசிங்க - தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆதிமுதல் அந்தம்வரை தெரியும் என்று கூறிக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க-இப்போது சிங்கள வாக்குகளுக்காக தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையைப் புறந்தள்ளுகின்றார். ஏதேனும் காரணங்களைக் கூறிக் காலத்தைக் கடத்தி – தமிழ் மக்களையும் ஏமாற்றி அவர்களின் வாக்குகளையும் கவர்ந்துகொள்ளலாம் என்று எண்ணுகின்றார். இலங்கைத்தீவின் பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இதய சுத்தியுடன் அணுகி – அவர்களின் கோரிக்கைகளின் நியாயத்தைப் புரிந்துகொண்டு தீர்வுக்கு முயல்வார்கள் என்பது கனவிலும் நடக்காது என்பதையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நிரூபித்திருக்கின்றார். பெரும்பான்மையினத் தலைவர்களின் இந்த மனநிலையில் மாற்றம் ஏற்படும்வரையில் நாட்டுக்கு விமோசனமும் இல்லை, முன்னேற்றமும் இல்லை...!





## கடலுக்கடியில் மின்பரிமாற்றம் 1.2 பில்லியன் டொலர் முதலீடு!

### இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 8**

**இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மின்கடத்தல் திட்டத்தை முன்னெடுக்க மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

அதற்கமைய இருநாடுகளுக்கும் இடையிலான மின்பரிமாற்றத்தை கடலுக்கடியில் மேற்கொள்ள குழாய்களை அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.
தென்னிந்தியாவை இலங்கையுடன் இணைக்கும் முக்கியமான திட்டங்களாக எண்ணெய்க் குழாய் அமைப்பு, திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு விநியோகத் திட்டங்கள் உள்ளன.
திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு விநியோகத் திட்டத்தின் பிரதான இலக்கு அநுராதபுரத்தையும், சென்னையையும் நேரடியாக இணைப்பதாகும்.
மேலும் திருகோணமலை எண்ணெய்த் தாங்கி வளாகத்தை எரிசக்தி மையமாக அபிவிருத்தி செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அதற்கு இந்திய முதலீடுகள் பயன்படுத்தப்படவுள்ளன.
1.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் இருநாடுகளுக்கும் இடையிலான மின்கடத்தல் திட்டத்தை முன்னெடுக்க மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் இந்தியத் தூதுவர் கூறியுள்ளார். (ச-இ)

## காற்று மாசு அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 8
காற்றின் தரக் குறியீட்டின்படி, நாட்டில் காற்று மாசுபாடு அதிகரித்துள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.
அந்தச் சுட்டியின்படி கொழும்பின் காற்றுமாசு 127 ஆக பதிவாகியுள்ளது. கம்பஹா மாவட்டத்தில் 165 ஆகவும் திருகோணமலை மாவட்டத்தில் 159 ஆகவும் பதிவாகியுள்ளது.
காற்றின் தரக் குறியீடு 150 முதல் 200 வரை இருந்தால், அது ஆபத்தான நிலை என்றும், 100 முதல் 150 வரை இருந்தால், குழந்தைகள், முதியவர்கள், சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அலி சப்ரி ரஹீமுக்கு ஒரு மாதகாலத் தடை

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தங்கத்துடன் கைது செய்யப்பட்டு, பின்னர் அபராதம் செலுத்தி விடுவிக்கப்பட்ட அலிசப்ரி ரஹீம் ஒரு மாதகாலம் நாடாளுமன்றம் பிரவேசிக்க இடைக்காலத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என அவைத் தலைவர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்ற அமர்வின்போது இதனை அறிவித்தார்.
சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் பரிந்துரைக்கமைய இந்த இடைநிறுத்தம் நடைமுறையில் இருக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

## சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பு

சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகின்றன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.
அண்மைக்காலங்களில் பதிவான சிறுவர் துஷ்பிரயோகங்கள் நெருங்கிய உறவினர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அதிகார சபை தெரிவித்துள்ளது. (எ-இ)

## வடக்குத் தீவுகளுக்கு மின்சாரம்; அரசாங்கமே முன்னெடுப்பு

### வலுசக்தி அமைச்சர் சுட்டிக்காட்டு

வடக்கு மாகாணத்தில் அனலைதீவு, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆகியவற்றுக்கான மின்சாரம் வழங்குவதற்கான சூரியமின்கலதிட்டத்துக்கு சீனாவுக்கும், இந்தியாவுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்று மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். வடக்கு மாகாணத்தில் மின்னுற்பத்தித் திட்டத்தை மேம்படுத்த 11 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கவே இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது- என்றார். (ச-இ)

## நாளை

09.03.2024
**சனிக்கிழமை**
**மாசி–26**
சுபநேரம் : 03.23 – 04.53
ராகுகாலம் : 09.23 – 10.53

அமாவாசை விரதம்

## நாளொரு நல்வார்த்தை

தோல்வியை ஒப்புக்கொள்ள தயங்காதே. தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. – லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகளிர்தினம் இன்று

# பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும்...

■ சி.நற்குணலிங்கம்

மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்' என்றார் கவிமணி தேசிகவிநாயம் பிள்ளை. பெண்களுக்கான முக்கியத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நிலையில், உலகம் முழுவதும் கொண்டாடப்படும் தினங்களில் மகளிர் தினம் என்பது மிகவும் சிறப்புவாய்ந்த ஒன்றாகும் என்றால் மிகையாகாது.

ஆரம்பத்தில் பெண் அடிமைத்தனம் என்ற ஒன்று இருந்ததில்லை. அது பெண்களுக்கான அனைத்து உரிமைகளையும் உடைய தாய்வழி சமூகமாகவே இருந்தது. மெல்ல, மெல்ல நிலவுடமை சமூக அமைப்பு உருவெடுத்தது. இதன் விளைவாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் வேலைப் பிரிவினை தோன்றியது. பெண்கள் வாரிசுகளுக்காகவும் குடும்ப அமைப்புக்காகவும் மட்டும் என்ற தோற்றம் உருவெடுத்தது. காலம் செல்லச்செல்ல பெண்கள் இந்தக் கூட்டுக்குள் இருந்து வெளியே வரத்துடித்தனர். கி.பி. 1789இல் பிரெஞ்சுப் புரட்சியின்போது பரிஸ் பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர். பெண்களுக்கும் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் பெறவேண்டும் என்றும், உழைப்புக்கு ஏற்ற ஊதியம், 16 மணிநேர வேலையைக் குறைக்கவேண்டும், வாக்குரிமை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது. நாள்கள் செல்லச்செல்ல பெண்கள் மனதில் விழிப்புணர்வு ஏற்பட ஆரம்பித்தது.

### விதைபோட்ட நியூயோர்க்

18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நியூயோர்க்கில் ஆயிரக்கணக்கான பெண்கள் ரஷ்யா, இத்தாலி, போலந்து போன்ற நாடுகளிலிருந்து பணிக்காகக் குடிபெயர்ந்து வேலை செய்துவந்தனர். மணிக்கணக்கில் வேலை, குறைந்த ஊதியம் அவர்கள் வேலைக்குப் பயன்படுத்தும் ஊசி, நூல், உட்காருவதற்கான நாற்காலி தொடங்கி அனைத்துக்கும் வரியும் கட்டவேண்டும் என்ற அவல நிலையுடன், வேலையில் ஏற்படும் பாதிப்பு, கழிவறையை அதிகநேரம் பயன்படுத்துவதற்கு எல்லாம் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டது. ஊதியத்தில் மட்டுமன்றி உரிமையிலும் அநீதி இழைக்கப்பட்டது. 1820ஆம் ஆண்டில் முதன்முதலில்தையல்நிறுவனப் பெண்கள் இணைந்து முதல் வேலை நிறுத்தம் இடம்பெற்றது. இவற்றில் புகழ் பெற்றது மசாச்சூசெட்ஸில் உள்ள பருத்தி ஆலையில் நடைபெற்ற வேலைநிறுத்தம். வெறும் மூன்று டொலருக்கு 81 மணிநேர வேலை. அதிலும் ஒன்றே கால் பணத்தை விடுதிக்கும், உணவுக்கும் எடுத்துக் கொள்வார்கள். இந்தப் பின்னணியில்தான் உழைக்கும் பெண்கள் சங்கம் உருவானது. இப்படியாக சங்கங்கள் வளரத்தொடங்கின.

1908ஆம் ஆண்டில் குறைந்த வேலை நேரம், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் மற்றும் வாக்களிக்கும் உரிமை ஆகியவற்றைக் கோரி 15 ஆயிரம் பெண்கள் அணிதிரண்டு நியூயோர்க் நகரை ஸ்தம்பிக்கச் செய்தனர். அப்போது படையினரால் கொடூரமாகப் பெண்கள் தாக்கப்பட்டனர். இவற்றை எல்லாம் தாங்கிக்கொண்ட பெண்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். அவர்கள் இலக்கு தெளிவாக இருந்தது. அதன் விதைகள் வேரூன்றப்பட்டன. உழைக்கும் பெண்களைத் தாண்டி, நடுத்தர, மேல்தட்டு வர்க்கப் பெண்களும் போராட்டத்தில் தங்களை இணைத்துக்கொண்டதன் மூலம் போராட்டம் வலுப்பெற்றது. பெண்களின் அடிப்படை உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் இயக்கமாக மட்டும் இயங்காமல் சமூகத்தில் நிலவும் அவலங்களுக்கும் சேர்த்தே போராடத் துணிந்தனர். பெண்களுக்கான நாளை சர்வதேச மயமாக்க வேண்டும் என்ற எண்ணம் கம்யூனிஸ்ட் ஆர்வலர் மற்றும் பெண்கள் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் கிளாரா ஜெட்சின் என்ற பெண்ணிடம் இருந்து வந்தது.

### தோற்றமும் பின்னணியும்

1910ஆம் ஆண்டில் டென்மார்க்கின் தலைநகரம் கோப்பன்ஹேகனில் நடந்த உழைக்கும் பெண்களுக்கான சர்வதேச மாநாட்டில் அந்தப் பெண்மணி தனது எண்ணத்தைப் பரிந்துரைத்தார். அங்கு 17 நாடுகளைச் சேர்ந்த 100 பெண்கள் இருந்தனர். அவர்கள் கிளாராஜெட்சினது ஆலோசனையை ஒருமனதாக ஏற்றுக் கொண்டனர். 1911ஆம் ஆண்டிலிருந்து அவுஸ்திரேலியா, டென்மார்க், ஜேர்மனி மற்றும் சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் பல திகதிகளில் சர்வதேச மகளிர்தினம் கொண்டாடப்பட்டு வந்தது.

முதலாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்தபோது, 1917இல் ரஷ்யாவில் 'போர் வேண்டாம் அமைதியும் உணவும்தான் தேவை' என்று வலியுறுத்தி புரட்சிப் போராட்டத்தைத் தொடங்கும்வரை இந்தத் தினம் இந்த நாளில்தான் கொண்டாடப்படவேண்டும் என்பது முறைப்படுத்தப்படவில்லை. சர்வதேச மகளிர் தினமாக மார்ச் எட்டாம் திகதியை ஆண்டுதோறும் கொண்டாடப்பட வேண்டும் என்று 1921ஆம் ஆண்டில் மொஸ்கோ நகரில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் பெண்கள் அகிலம் அமைப்பின் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. அதிலிருந்து உலகம் முழுவதும் மார்ச் எட்டில் சர்வதேச மகளிர்தினம் கொண்டாடப்படுகிறது.

### ஐ.நா.வின் அங்கீகாரம்

பின்னர் 1975ஆம் ஆண்டை சர்வதேச மகளிர் ஆண்டாக ஐக்கிய நாடுகள்சபை பிரகடனப்படுத்தியது. எட்டாம் திகதி பெண்களுக்கான சிறப்பு நாளாகும். சர்வதேச மகளிர் தினம் தொழிலாளர் இயக்கத்தில் இருந்து வளர்ந்து ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்பட்டது சிறப்புக்குரியதாகும்.

சர்வாதிகார அரசுக்கு எதிராக தமது உரிமைகளை மீட்பதற்கான உழைக்கும் பெண்களின் புரட்சியை நினைவு கூர்வதற்காக உருவானதுதான் சர்வதேச உழைக்கும் மகளிர் நாள் என்பது இதன்மூலம் தெளிவாகிறது. உழைக்கும் பெண்களின் உரிமைகளை உறுதி செய்வதும் அனைத்துப் பணிகளிலும் நிலைகளிலும் பாலின சமத்துவத்தை உறுதி செய்வதும்தான் சர்வதேச மகளிர்தினக் கொண்டாட்டங்களுக்கு அர்த்தம் சேர்க்கும். ■




அனல்நிறை நிலவுகளே!
அச்சம்விட்டு உச்சம் தொடுவீர்
காலமெல்லாம் கட்டுப்பட நீர்
கற்செதுக்கற் பூக்களல்ல
வீடாள மட்டுமல்ல மங்கை
நாடாள பிறந்தவளே!
அடுப்பங்கரைப் பயணங்கள்
அண்டவெளி சென்றனவே
விறகான உடல்களும்
சருகான உணர்வுகளும் இன்று
விந்தைகள் புரிந்திடவே
விதையாக விழுந்தவையே
சாலர ஏக்கங்கள்
சரித்திரத் தூண்டலாக
மூன்றுநாள் முடக்கங்கள்
முற்றுப்புள்ளி கண்டனவே
காப்புமில்லை ஈர்ப்புமில்லை பெண்ணின்றி
உலகுமில்லை உயிருமில்லை
வாளாக தீயாக பெண்மையே
வலம்பரு வையகத்தில்
அறியாமைப் பெண்களின்று
அழிந்தரென கூறிடுவீர்
பெருமைகொள் வையகமே! உன்
பெருந்தவமே மாதரே!

**உஷா தேசவன்**
முதலாம் வருட மாணவி,
பேராதனைப் பல்கலைக்கழகம்

# வாழைப்பழம் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்.குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளதால் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீர்வேலி வாழைக்குலை விற்பனை நிலையத்துக்குத் தினமும் பெரும் எண்ணிக்கையிலான வாழைக்குலைகள் கொண்டுவரப்படுகின்றன. அதனால் அவற்றின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதேவேளை தென்பகுதிக்கும் அதிகளவான வாழைக்குலைகள் எடுத்துச்செல்லப்படுகின்றன. ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 60 ரூபா முதல் 80 ரூபாவரையில் விற்பனை செய்யப்படுகின்றது. (ச-17)


# சிவராத்திரி விடுமுறை

யாழ்ப்பாணம், பெப். 8

சிவராத்திரியை முன்னிட்டு கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு இன்று வெள்ளிக் கிழமை விடுமுறையளிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கமைய இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (ச-17)

# மகா யாகம்


மிருசுவில் உசன் கந்தசுவாமி கோவிலில் ஸ்கந்த மகா யாகம் இன்று வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (9)



அகில இலங்கை சைவமகாசபை நடைமுறைப்படுத்தும் சிவவாரத்தை முன்னிட்டு, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் பத்தாவது தடவையாக ஏற்பாடு செய்த குருதிக்கொடை முகாம் கீரிமலை குழந்தைவேல் சுவாமி அறப்பணி நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்னிணைப்பு மீளப்பெறல்: கட்டணம் குறைக்கப்படும்



கொழும்பு, மார்ச் 8

மின்னிணைப்பை மீளப்பெறுவதற்கான கட்டணத்தை 3 ஆயிரம் ரூபாவிலிருந்து 800 ரூபாவாகக் குறைக்க பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்தார். மின் இணைப்பு மீளமைக்கப்படும்போது செலுத்த முடியாத தொகையை தவணை முறையில் செலுத்துவதற்கும் மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச)

## பஸில் ராஜபக்சவால் இனி எதுவுமே செய்ய முடியாது!

### அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 8

பஸில் ராஜபக்ச அல்ல எந்தக் கொம்பன் வந்தாலும் இலங்கை அரசியலில் ராஜபக்சக்களால் இனி எதையும் செய்யமுடியாது என்று தேசிய மக்கள் சக்தியின் தலை வர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- இற்றைக்கு ஒன்றரை வருடத்துக்கு முன்னர் விமான நிலையத்தில் இந்த பக்கம் இருந்து அந்தப் பக்கம் போக முடியாமல் தவித்தவர்தான் பஸில். அவர்களால் இலங்கை அரசியலில் மீண்டும் ஒன்றும் செய்யமுடியாது- என்றார். (ஏ-44)

## மகா சிவராத்திரி

யாழ்ப்பாணம், மார்ச் 8

இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரும் இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடத்தும் மகா சிவராத்திரி இன்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு மேற்படி ஆலய முன்றிலில் நடைபெறும்.

++++++

குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சிறப்பு அபிஷேக, பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

++++++

ஊரெழு சிவபூரணி அறநெறிப் பாடசாலை நடத்தும் மகா சிவராத்திரி விழா பாடசாலை அதிபர் து.ஜெகதீஸ்வரன் தலைமையில் ஊரெழு சிவபூரணிக் காளி அம்மன் ஆலய முன்றிலில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-6-66)

# பஸிலின் கோட்டையில் ஓங்கியது ரணிலின் கை

கொழும்பு, மார்ச் 8

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் அரசியல் கோட்டையாக விளங்கும் கம்பஹா மாவட்டத்தில் உள்ள பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவை ரணில் விக்கிரமசிங்க பெற்றுள்ளார்.

13 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஐவர் மாத்திரமே தற்போது பெரமுனக் கட்சியுடன் நிற்கின்றனர்.

கம்பஹா மாவட்ட தலைவரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அமைச்சர் நளின் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி, நாடாளுமன்ற உறுப்பினர் நிமல்லான்சா, நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் உள்ளனர். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிக்கும் முடிவிலும் உள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த, நாடாளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்த்தன, உபுல் மகேந்திர ராஜபக்ச, பிரதிப் விதான, மிலான் ஜயதிலக்க ஆகியோரே பெரமுனவின் பக்கம் நிற்கின்றனர். (ம-44)

**காணி விற்பனைக்கு**

யாழ். பிறவுண் வீதியில் 1 1/2 பரப்புக் காணியும், 2 பரப்புக் காணியும், 4பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

**077 723 2535**

## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி குளோறி அ'கட்டார் தி.கு**

இந்தியாவைப் பிறப்பிடமாகவும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி குளோறி அ'கட்டார் தி.கு நேற்று (07.03.2024) வியாழக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (09.03.2024) சனிக்கிழமை மு.ப 09.00 மணிக்கு யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:**
**அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்**
**மாகாணத் தலைவி,**
**121, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 24029) S-1

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 30 . 10 . 1951

விண்ணில் 28 . 02 . 2022



**அமரர்**
**கணேசலிங்கம் ஐயா**
**சரஸ்வதியம்மா**

திதி- மாசி மாத அபரபட்ச திரயோதசி 08.03.2024

எங்கள் தெய்வமாய் வாழ்ந்தாய் நீயே
என்றும் அன்பினை பொழிந்தாய் தாயே
உங்கள் மறைவினால் உணர்விழந்தோமே
ஆண்டு இரண்டென ஆனதே தாயே
உங்கள் நினைவினால் வாடுகின்றோமே
உயிரின் மேலென திகழ்ந்த எம்தாயே

493 / 26 ஏகாம்பரம் வீதி
உப்புவெளி,
திருகோணமலை. (CS/29366) J-1

தீராவாடும்
கணவன், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

தோற்றம் 15 . 04 . 1948

மறைவு 06 . 03 . 2024.



**சிவலோகநாதன் கௌரியம்மா**

யாழ். தாவடியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் ஐயனார் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட சிவலோகநாதன் கௌரியம்மா நேற்று முன்தினம் (06.03.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவலோகநாதன் அவர்களின் அன்பு மனைவியும், கலைவாணி, கலைச்செல்வன், ஜங்கரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலநாதன், அனுஷா, உதயபாரதி ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஜன், பியோன்ஸி, சாம்ஜன், பேர்ணிஸ், அருண், அஜீஸ், அஸ்வின், கௌதம், ஹறிஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பரமேஸ்வரி, ஜெகநாதன், லோகநாதன், காலஞ்சென்ற நாதன் ஆகியோரின் மைத்துனியும், இரத்தினம்மா காலஞ்சென்றவர்களான பூபதியம்மா, கதிர்காமசுந்தரம் மற்றும் யோகேஸ்வரி, இராசேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.03.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 08.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 10.00 மணியளவில் சுன்னாகம் கொத்தியாளடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**ஐயனார் கோவில் வீதி,**
**சுன்னாகம்.**

(CR/42071) J-1

**077 608 8734**
**077 302 2443**

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 . 03 . 1933

மறைவு 04 . 03 . 2019



**அமரர்**
**அருணாசலம் சிதம்பரநாதன்**

திதி : திரயோதசி (08.03.2024-வெள்ளிக்கிழமை)

மீளாத்துயில் கொண்டு
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த் துளிகளைக்
காணிக்கையாக்குகிறோம்...

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

புத்தூர் வடக்கு,
புத்தூர்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS 54279) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயார்லைன்ஸ் கடன் அரசு பொறுப்பேற்பு

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் செலுத்த வேண்டிய 510 மில்லியன் டொலர் கடனை அரசாங்கம் பொறுப்பேற்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இந்த விடயத்தைத் தெரிவித்தார். மேலும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மறுசீரமைப்புத் திட்டத்துக்குப் பொருத்தமான முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்காக விலைமனு கோரலுக்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



## ஹெரோய்னுடன் கைது; ரூ.90,000 தண்டம்


கிளிநொச்சி, மார்ச் 8

2018 ஆம் ஆண்டு தருமபுரத்தில் 1.51 மில்லி கிராம் ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்டவருக்கு கிளிநொச்சி உயர்நீதிமன்றத்தால் 90 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக 40 ஆயிரம் ரூபாவும், வியாபாரத்தில் ஈடுபட்டமைக்காக 50 ஆயிரம் ரூபாவுமாக 90 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட் டுள்ளது.

தண்டப் பணத்தை செலுத்தத் தவறினால் ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையும், 15 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 4 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ஒ-113)

## மின்சாரசபைக்கு அதிக இலாபம்!



இலங்கை மின்சாரசபை 2023 ஆம் ஆண்டில் அதிக இலாபத்தை ஈட்டியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. மின்சாரக் கட்டணங்களை என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்தமையே இதற்கான காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

2023ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையின்படி, சுமார் 61.2 பில்லியன் ரூபாவை இலங்கை மின்சாரசபை வருமானமாகப் பெற்றுள்ளது. (எ-இ)


## தேவை


தோட்ட வேலை செய்வதற்கு ஆள் தேவை.
45 - 50 வயதுக்கு உட்பட்டவர் தங்கி நின்று வேலை செய்வது விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 076 383 0056
(CR/42072) J-1

## வாடகைத்தாய் தேவை

நல்ல ஆரோக்கியமான வாடகைத்தாய் தேவை.
தங்களின் விபரம் இரகசியமாக வைக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு
தொடர்பு:- 074 004 7586
(CS/54189) J-1


## மரண அறிவித்தல்

### வடிவேலு மணிவேலழகன்



தோற்றம் 07.06.1957 — மறைவு 06.03.2024

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு மணிவேலழகன் நேற்று முன்தினம் (06.03.2024) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு - மணியம்மா தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற கதிரேசு மற்றும் நவரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், லோமாவதி அவர்களின் பாசமிகு கணவரும், மகிழரசி, நிஷாந்தினி, காலஞ்சென்ற நாகவிபூஷன் மற்றும் பத்மவிதுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலடி ஒழுங்கை,
ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 062 8748
076 176 8848
(CS/54277) J-1

## மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



### தம்பிஜயா பரமேஸ்வரன்

(உப தபால் அதிபர்)

கந்தரோடை உப தபாலகத்தில் உப தபால் அதிபராக தன் பணியில் சிறப்புற 25 வருடங்கள் கடமையாற்றி இன்று (08.03.2024) வெள்ளிக்கிழமை ஓய்வு பெறுவதையிட்டு அவரின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக் காலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.


Best Wishes

*வாழ்த்துவோர்:*

*அஞ்சல் சமூகம் - சுன்னாகம்*

(CS 54282) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 02 . 1945 — மறைவு 05 . 03 . 2024

### பரம்சோதி செல்வரட்ணம்

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரம்சோதி செல்வரட்ணம் கடந்த (05.03.2024) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரம்சோதி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - மங்கையர்க்கரசிஅம்மாள் தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரிஅம்மாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மங்கையர்க்கரசி, சிவசுப்பிரமணியம், கந்தசாமி, மகாதேவி மற்றும் மகேஸ்வரி (கொழும்பு), குணசீலன் (பிரான்ஸ்), ராசேஸ்வரன் (ராசன் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வலோபன் (கனடா), டர்சினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதர்சினி (கிருபா - கனடா), அரவிந்தன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வினா, அபர்ணா, ஆகாஸ் (கனடா), அருஸன், வாசினி, வர்சினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும், சிவகாமிஅம்மாள், காலஞ்சென்ற சௌந்தரநாயகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.C லேன், கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
077 554 0126 (இலங்கை)
001416 317 3935 (கனடா)
0061425798071 (அவுஸ்திரேலியா)
(CS 54283) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைப் பெண்

பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு
குறைந்தபட்ச 8% வருடாந்த வட்டி வீதம்



## இரண்டாவது முறையாகவும் பெண் தொழில் முயற்சியாளர்களை வெற்றிப் பெறச் செய்வதற்கான பக்கபலம்

**இலக்கை எட்டும் வரை நிற்காமல் தொழில் முயற்சிகளால் வாழ்க்கையை வெற்றிக்கொள்ளும் பெண்களான நீங்கள் எம் தேசத்தின் வழிகாட்டிகள். இது உங்கள் மதிப்பையும் பங்களிப்பையும் நன்கறிந்த செலான் வங்கி சென்ற வருடம் ஆரம்பித்த சாதனைப் பெண் கடன் வசதியினை இவ்வருடமும் பெற்றுக்கொடுக்க தயாராக உள்ளது.**

நீங்கள் வியாபாரத்தில் 51%க்கு அதிக பங்குரிமையைக் கொண்ட பெண் தொழில் முயற்சியாளர் ஒருவரா?

உங்கள் வியாபாரத்தில் குறைந்தபட்சம் 20% பெண்களால் நிர்வகிக்கப்படுகின்றதா? (இதன்போது பிரதான நிறைவேற்று அதிகாரி பிரதான நடவடிக்கை அதிகாரி அல்லது அங்கத்துவர் குழாமில் 30% பெண்களாக இருத்தல் வேண்டும்)

### ஆம் எனில் இது உங்களுக்கான வாய்ப்பு

பெண்கள் உங்களது புதிய வியாபரத்தினை ஆரம்பிக்க, வியாபாரத்தை விரிவுப்படுத்த அல்லது நவீனமயமாக்குவதற்கு அதிகபட்ச மீள்செலுத்துகைக் காலத்துடன் கடன் ஒன்றை பெற்றுக்கொள்ள முடியும்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

இது நிதியமைச்சின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் கடன் செயற்திட்டமாகும்.

**இன்றே 011 200 88 88 ஐ அழையுங்கள் அல்லது அருகிலுள்ள செலான் வங்கிக்கிளைக்கு வாருங்கள்.**

செலான் வங்கி


# செலான் வங்கி தனது 'தினன அய' திட்டம் ஊடாக இலங்கையின் பெண் தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டும் முகமாக இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்தது

செலான் வங்கி, நாடு முழுவதிலும் உள்ள பெண் தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்ட செயலமர்வுகளை ஏற்பாடு செய்யும் பொருட்டு இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்தது. மார்ச் 7, 2024 அன்று நிட்டம்புவவில் ஆரம்பமாகிய இந்த செயலமர்வு, செலான் வங்கியின் 'தினன அய' முயற்சி ஊடாக பொருளாதார வலுவூட்டல் மற்றும் பாலின சமத்துவத்தை வளர்ப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது.

இந்தச் செயலமர்வில், சந்தை அணுகல் மற்றும் ஏற்றுமதியை எளிதாக்குவதில் நிபுணத்துவம் பெற்ற புகழ்பெற்ற சர்வதேச வர்த்தக ஆலோசகரான திரு.உபுல் தசநாயக்க சிறப்புரையாற்றினார். திரு.தசநாயக்கவின் அறிவு மற்றும் வழிகாட்டல், இன்றைய உலகளாவிய சூழலில் தொழில்முனைவோர் எதிர்நோக்கும் சிக்கல்களுக்குத் தேவையான அறிவு மற்றும் கருவிகளை வழங்கி பங்கேற்பாளர்களை ஊக்கப்படுத்தியது.

திரு.தசநாயக்கவின் சிறப்புரைக்கு மேலதிகமாக, செலான் வங்கி அதிகாரிகள், தொழில்முயற்சியாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட டிஜிற்றல் தீர்வுகள் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்கியதோடு செலான் வங்கியின் பல நன்மைகளை வழங்கும் 'தினன அய'திட்டம் குறித்து பங்கேற்பாளர்களுக்குத் தெளிவுபடுத்தினர். இந்தத் திட்டங்களில், இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட Energizer கடன் திட்டமும் உள்ளடங்கியது. இது உற்பத்தி, சுற்றுலா, ஆடை, விவசாயம் மற்றும் ஏற்றுமதி சார்ந்த முக்கியமான தொழில்துறைகளில் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSMEs) நிதி ஊக்கியாக செயற்படுகிறது.

Energizer கடன் திட்டம் மூலம் வணிகங்கள் அதிகபட்சமாகப் பத்து வருடங்களுக்கு கவர்ச்சிகரமான 8% வட்டி விகிதத்துடன் அதிகபட்ச கடன் தொகையாக ரூ.15 மில்லியனை அணுகலாம். இந்த நிதியுதவி சொத்து கையகப்படுத்தல், தொழில்நுட்பம் ஏற்றுக்கொ[illegible] வணிக விரிவாக்கம் மற்றும் உற்பத்தித்திறனை[illegible]டுத்துதல்





போன்ற நோக்கங்[illegible]காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் செ[illegible]ான் வங்கி, MSMEகள் எதிர்கொள்ளும் தனித்துவமா[illegible] சவால்களுக்குத் தீர்வு காணவும் இன்றைய போட்டி[illegible] சந்தையில் செழிக்கத் தேவையான நிதி நெகிழ்வுத்த[illegible]மையை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு[illegible]ளது.

எதிர்காலத்தில் நாடு முழுவதிலும் நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வுகளில் அனைத்து ஆர்வமுள்ள பெண் தொழில்முயற்சியாளர்களையும் பங்குபற்றி அவர்களின் வணிகக் கனவுகளை நனவாக்குவதற்கான முதற் படியை எடுக்கு[illegible] செலான் வங்கி அழைப்பு விடுக்கிறது.

### செலான் வங்கி தொடர்பாக

அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி, அதிநவீன தொழில்நுட்பம், புதுமையான தயாரிப்புகள் மற்றும் சிறந்த தரமான சேவைகள் மூலம் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு அதிசிறந்த வங்கி அனுபவத்தை வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன் செயற்படுகிறது. சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள், சில்லறை விற்பனை மற்றும் பெருநிறுவன வாடிக்கையாளர்கள் உள்ளடங்கலாக வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள இவ்வங்கி, நாடுமுழுவதும் 540க்கும் மேற்பட்ட அணுகல் புள்ளிகளைக் கொண்டுள்ளது. செலான் வங்கியானது நிதிரீதியாக நிலையான மற்றும் சிறந்த செயற்றிறன்மிக்க நிறுவனமாக Fitch Ratings நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், வங்கியின் தேசிய நீண்டகால மதிப்பீடு 'A'(lka)வாகத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இவை செலான் வங்கியின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் அனைத்து அம்சங்களிலும் நிலையான சேவை வழங்கலை உறுதி செய்வதில் அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்குச் சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவராத்திரி தினம்

வட்டுக்கோட்டை, மார்ச் 8

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணி தொடக்கம் நான்கு சாம பூஜைகளும் அதைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் நடைபெறும். யாவும் ஆலய முன்றிலில் அறநெறிபாடசாலை மாணவர்களின் ஏற்பாட்டில் கலைநிகழ்வுகளும் சிவஸ்ரீ ந.பிரசாந்தக் குருக்களின் கௌரவிப்பும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (எ)

✦ ✦ ✦ ✦

அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில், மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பூசைவழிபாடுகள், கலை நிகழ்வுகள் மற்றும் அன்னதானம் என்பன இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று ஆலயபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (எ-159)

✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் மகா சிவராத்திரி தினச் சிறப்பு நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் திருநெல்வேலியில் அமைந்துள்ள மேற்படி நிலைய மண்டபத்தில் ஆரம்பமாகி நாளை சனிக்கிழமை காலை 6 மணி வரை இடம்பெறவுள்ளது. (ம-66)

✦ ✦ ✦ ✦

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ விஸ்வநாத சுவாமி ஆலய மகா சிவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நான்கு சாமப் பூசைகளும் சிறப்பாக நடைபெறவுள்ளதுடன் அடியவர்கள் ஆலயக் கிணற்றில் நீராடி ஆலயத்திலுள்ள ஸ்ரீ அருணாசலேஸ்வர மகாலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்தும், நெய் தீபம் ஏற்றியும் வழிபட முடியுமென மேற்படி ஆலயப் பிரதமகுரு தெரிவித்தார். (ம-66)



# சித்திரைப் புத்தாண்டின் பின் பொதுத்தேர்தலுக்குத் திகதி!

## உதயங்க வீரதுங்க கணிப்பு

**கொழும்பு, மார்ச் 8**

**தமிழ், சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் பொதுத்தேர்தலுக்கு நாள் நிர்ணயிக்கப்படும் என்று ராஜபக்ச குடும்பத்தின் முக்கியஸ்தரான இலங்கைக்கான முன்னாள் ரஷ்ய தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் பஸில் ராஜபக்சவுடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னரே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். மஹிந்த ராஜபக்ச உள்ளிட்டவர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட உதயங்க வீரதுங்க மேலும் தெரிவித்ததாவது:

"ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்படும். புத்தாண்டு முடிந்த பின்னர் பொதுத்தேர்தலுக்கு நாள் நிர்ணயிக்கப்படும். அதில் பெரும்பான்மை பலத்தை பொதுஜன பெரமுன கைப்பற்றும் என்ற நம்பிக்கை உள்ளது. ஜனாதிபதியின் பதவிக் காலம் முடியும் வரை ரணிலுக்கு ஆதரவு வழங்குவோம். அதன்பின்னர் ஆதரவு இல்லை. முதலில் பொதுத்தேர்தலே நடத்தப்படும், அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பேசுவோம் - என்றார். (ம-44)



மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. பிரதி அதிபர் செ.பிரசாத் அருள்தீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வாண்மை விருத்தி நிலைய முகாமையாளர் திருமதி விஜயகுமாரி முருகேசபிள்ளை கலந்து கொண்டார். (ம-66)



மன்னார். இரணைஇலுப்பைக்குளத்தில் 2023 - 2024 ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கையின் நெல் அறுவடை விழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தார். (ச-75)



சாவகச்சேரி பிரதேசசபையின் தரம் பிரிப்பு திண்மக்கழிவு சேகரிப்பு நிலையம் வரணி உப அலுவலகத்தில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ம-159)



போக்கட்டி அ.த.க. பாடசாலையில் தரம்-1 மாணவர்களுக்கான வாய்மொழி ஆங்கிலத் திறனை ஊக்குவிக்கும் வலய மட்ட ஆரம்ப நிகழ்வு அதிபர் தி. அபராஜிதன் தலைமையில் கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது. (எ-159)



ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் 2024 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி கல்லூரியின் அதிபர் அருட்தந்தை அன்ரன் அமலதாஸ் தலைமையில் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறை கிளை முகாமையாளர் திருமதி பிரமிளா ரமணகிருஸ்ணாவும், சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சத்தியசீலனும், கௌரவ விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் அன்னை புத்தகசாலை முகாமையாளருமான விஜிதரனும் கலந்து சிறப்பித்திருந்தனர். (எ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதர்மத்தை அழிக்கும் சிவராத்திரி!

நேர்மையற்ற வணிகம், விவேக சூன்யமுள்ள விஞ்ஞானம், அன்பில்லாத ஆதிக்கம், அந்த சிரத்தையுள்ள பக்தி, தர்மத்தின் பெயரால் இம்சை, வயிற்றுப் பசிதீர்க்கத் தன்குழந்தையை விலைபேசும் தந்தை, அழிவுக்காகவே காத்துக் கொண்டிருக்கும் அஸ்திர சாஸ்திரங்கள் படைக்கப்பட்டது அனைத்தும் அழிந்துபோகும் என்பதும் உறுதியாகவே தெரிகிறது. இன்று தர்மமில்லை, மனித நேயமில்லை என்ற சத்தம் ஒவ்வொருவர் வாய்வழியாகவும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றது. நம்பிக்கையற்ற இத்தகைய சூழலிலும்கூட நம்பிக்கையூட்டுகின்ற ஒரு 'துளி' உதயமாகியிருக்கிறது. இதனைத் தான் 'அதர்மமும் தலை விரித்தாடும்போது நான் வருவேன்' என இறைவன் கூறினார் என்று கூறியிருக்கிறார்கள். தர்மம் என்றால் என்ன? அதர்மத்தை அழிப்பது எவ்வாறு?

உலகில் மனிதரிடையே இம்மாதிரியான குழப்பம் நிலவும் சூழ்நிலையைத்தான் இருள் என்கின்றோம். இதை அறியாமை என்றும் கூறலாம். இதிலிருந்து மனிதன் விடுபட வேண்டும். விடுபடவேண்டும் என விரும்பி அவன் அதற்காகப் பல முயற்சிகளைச் செய்தாலும் மனிதன் தோல்வியையே கண்டான். ஆகவே, மனிதனை விடுவிக்கும் பொறுப்பு பிறவிச்சக்கரத்தில் இருந்து விலகியிருக்கும் கடவுளின் காரியமாகவே இருக்கின்றது என்பது கண்கூடல்லவா? தர்மம் என்பது நடைமுறை அல்லது தாரணை என்பதாகும். மனிதனுடைய ஆதியில் அவனது இயல்புகள் தெய்வீகமானவை. இதில் தூய்மை, சாந்தம், அன்பு, அஹிம்சை, குணம், சக்தி போன்றன அடங்குகின்றன. இதற்கு எதிரான அனுபவத்தை எது கொடுக்கின்றதோ அவை அனைத்தும் அதர்மமாகும். அதர்மத்தை வாளால் அழிக்க முடியாது. தர்மத்தின் மூலமே அழிக்கவேண்டும். அதாவது எவ்வளவுக்கு எவ்வளவு மனிதன் ஆதி இயல்புகளைத் தனக்குள்ளே கொண்டு வருகின்றானோ அந்த அளவுக்கு அவன் தர்மத்தை நிலைநாட்டுவான், நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றான் எனலாம். அவன் உள்ளிருக்கும் மாசு அகற்றப்படவேண்டும். அதனை அகற்ற வேண்டும் என்ற ஞானம் மனிதனுக்குக் கிடைத்து விட்டது. ஆனால், வெளியேற்றும் முயற்சிக்கு சக்தி அவசியமாகின்றது. இதற்கு என்னவழி? இதற்கு மனிதன் தனக்கு ஞானமளித்தவரிடமே பெறவேண்டும். இந்த வாய்ப்பை அளிப்பதற்காகவே கடவுள் அவதாரம் செய்கின்றார். இந்த மஹோன்னதநாளின் நினைவார்த்தப் பண்டிகைதான் சிவராத்திரி. உண்மையில் ராத்திரி என்ற பதம், 24 மணி நேரத்துக்கு ஒருமுறை நிகழும் அந்தகார இருளைக் குறிப்பதல்ல. மாறாக இது அநியாயம், பாவச்செயல், கொலை, கொள்ளை, வன்முறை, ஒழுக்கமின்மை காரணமாக நிகழக்கூடிய அழிவு அல்லது வீழ்ச்சி என்பதைக் குறிப்பதாகும்.

24 மணிநேரத்துக்கு ஒருமுறை ராத்திரி வந்து கொண்டிருக்கிறது. 365 இரவுகளுக்குள்ளும், இவற்றில் ஒரு ராத்திரியான சிவராத்திரிக்கும் என்ன வித்தியாசம்? எதனால் இந்த ஒரு ராத்திரியை விஷேசமாகக் கருதிக் கொண்டாடவேண்டும்? சிவராத்திரி 12 மணிநேரம் கொண்ட ராத்திரியைப் பற்றியது அல்ல. இதற்கு வேறு இரகசியம் இருக்கவேண்டும். அது என்ன? சிவராத்திரி தினத்தை சிவனுடைய பிறந்த தினத்தை நினைவுகூரும் வகையில் கொண்டாடப் படும் ஒரு விழாவாகும். சிவன் ஆற்றும் தெய்வீகப் பணி உலகமாற்றமாகும். ஞான ஒளி தந்து, அறியாமை இருள் அகற்றியவா. இதனாலேயே சிவராத்திரி என்று அழைக்கப்படுகிறது.

சந்திரனும் நட்சத்திரங்களும் இரவைப் பகலாக்க முடியாது. எப்போது சூரியன் உதயமாகின்றதோ அப்போது தான் பகல் ஆரம்பமாகின்றது. இதுபோலவே எப்போது ஆன்மாக்களின் தந்தை சிவபர மாத்மா இப்பூமியில் அவதரிக்கிறாரோ அப்போதுதான் அஞ்ஞானமாகிய இருள் விலகுகின்றது. சிவராத்திரி தினத்தன்று அனுசரிக்கப் படும் விரதம் அல்லது உபவாசம் என்பது மனதை பரமாத்மாவாகிய சிவனிடம் செலுத்தி ஆழமான அன்பு நினைவில் அவர் அருகில் வாசம் செய்வது, அவர் நினைவில் ஒன்றி இருப்பது தான் உண்மையான உபவாசமாகும்.



சிவராத்திரி தினத்தில் கண்விழிக்கிறோம். உண்மையில் நம் மனதில் இருக்கும் மாசுக்களாகிய இந்த உலக துன்பத்துக்கே காரணகர்த்தாவாகிய விகாரங்கள், தீயகுணங்கள், பலவீனங்கள் என்ற மாசுகளில் இருந்து விடுபட்டு தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான அஞ்ஞான உறக்கத்தில் இருந்து விழிப்புணர்வுடன் இருப்பது என்பது தான் உண்மையான கண்விழித்தலாகும்.

**பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம்,**
யாழ்ப்பாணம்.

## 70 வீத...

சார்ந்த நோய்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றுக்கெல்லாம் முதுகில் சுமந்து செல்வதற்குப் பொருத்தமற்ற புத்தகப்பைகளின் சுமையே காரணம்.

ஒரு மாணவன் தன் நிறைக்கு பத்துவீதமான நிறையுடைய புத்தகப்பையையே சுமந்து செல்லவேண்டும். 2011ஆம் ஆண்டு மாணவர்களுக்குப் பொருத்தமான புத்தகப்பையை கல்வியமைச்சு வடிவமைத்தது. அதேபோன்று மாணவர்களுக்குப் பொருத்தமான புத்தகப்பைகள் வடிவமைக்கப்படவேண்டும் - என்றார். (அ-ம-6)

## வெடுக்குநாறிமலை...

சிவராத்திரி வழிபாடுகளுக்காக ஏற்கனவே நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவைப் பின்பற்றுமாறு, வவுனியா நீதிமன்றத்தால் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று சிவராத்திரி வழிபாடுகள் ஏற்பாடாகியிருந்தன. சிவராத்திரி வழிபாட்டு முன்னேற்பாடுகளுக்காக வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசகரும், இன்னும் சிலரும் வாழைகள், தோரணங்கள் மற்றும் பூசைப்பொருள்களுடன் ஆலயத்துக்கு நேற்று இரவு சென்றனர். அவ்வாறு சென்றவர்களில் பூசகர் உள்ளிட்ட இருவரே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்றவர்கள் பொலிஸாரால் மறிக்கப்பட்டதுடன், அவர்கள் மீது கடும் பாதுகாப்புக் கெடுபிடிகளும் பிரயோகிக்கப்பட்டன. அவர்கள் கொண்டுசென்ற பொருள்களும், அவர்களுடைய திறன்பேசிகள், அடையாள அட்டைகள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திர அட்டைகள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அத்துடன் ஆலய வளாகத்துக்குள் செல்வதற்கும் பொலிஸாரால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் என்ன காரணத்துக்காக அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர் என்ற தகவல் பொலிஸாரால் வெளியிடப்படவில்லை. (அ-ம-26-110-66)

## சாணக்கியன்...

மரின் அலுவலகத்துக்குச் செல்கின்றீர்கள்?' எனக் கேட்டுத் தாக்கவும் முற்பட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் நேற்றுமுன்தின அமர்வின்போது சாணக்கியன், பஸில்ராஜபக்சவை ரோஹித உள்ளிட்டோர் விமான நிலையத்துக்குச் சென்று வரவேற்றமைக்காகக் கண்டனத்தைத் தெரிவித்ததுடன், நாட்டைப் படுகுழியில் தள்ளியவர்களை இவ்வாறு வரவேற்று சிங்கள மக்களை முட்டாள்களாக்க முற்படுகின்றீர்கள் என்று கடுமையாக விமர்சித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய ரோஹித அபேகுணவர்த்தன, நாடாளுமன்ற சிறப்புரிமைக்குள் இருந்து விமர்சிக்காது பொதுவெளியில் விமர்சிக்குமாறு சவால் விடுகின்றேன் என்று சாணக்கியனைப் பார்த்துத் தெரிவித்திருந்தார். இதன் பின்னரேயே சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பி ரோஹித தன்னைத் தாக்க வந்தார் என்று சாணக்கியன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் சாணக்கியன் மேலும் தெரிவித்ததாவது:-

புலி என என்னை விமர்சித்திருந்த ரோஹித அபேகுணவர்த்தன நாடாளுமன்றத்தில் உள்ள பிரதமரின் அலுவலகத்துக்குச் சென்றபோது என்னைத் தாக்க முற்பட்டிருந்தார். என்னை அவர் அச்சுறுத்தியதோடு நீங்கள் எவ்வாறு எமது நாட்டின் பிரதமரைச் சந்திக்கலாம். அவர் சிங்கள மக்களுக்கான பிரதமர் எனக் கூறி தாக்க முற்பட்டார்.

இதற்கு பிரமதரின் அலுவலகத்தில் இருந்த ஊழியர்கள் மற்றும் அசோக பிரியந்த, ஜகத் பிரியங்கர ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் சாட்சி. இது மிகவும் பாரதூரமான விடயம். எனக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் குறித்து நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழுவில் விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் - என்றார். (அ-ம-44)

## வீட்டுக்கு...

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த வெள்ளை ஈக்கள் சில நாள்களிலேயே பல்லாயிரக் கணக்கில் பரவலடையக்கூடியவை. அவை முட்டையிட்டுப் பல்கிப் பெருகியதை யடுத்து இலைகளின் பச்சையத்தையே உணவாகக் கொள்கின்றன. இதனால், வெள்ளை ஈக்களின் தாக்கத்துக்கு உட்பட்ட சில நாள்களில் அந்த இலைகள் கொக்கு, காகம் எச்சமிட்டதைப்போன்று தோன்றுவதுடன் மரங்களின் விளைதிறன்களும் பாதிக்கப்படுகின்றன.

இவற்றின் எச்சங்கள் நாவல் அல்லது கறுப்பு நிறமான கீழுள்ள தென்னை மரங்களில் விழுவதனால், அவை முதலில் கரும்புள்ளியாக மாறி பின்னர் பூஞ்சண நோயின் தாக்கத்தைப்போன்று மண்ணிறமாக மாற்றம் பெறும்.

சிலர் வெண்ணிற ஈக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த ஓலைகளை முழுமையாக வெட்டி எரித்துவிடுகின்றனர். இதுவும் ஓர் ஆபத்தான நடவடிக்கையாகவே இருக்கின்றது. தென்னைகள் காய்ப்பதற்கு ஓலைகள் மிக அவசியமானவை. ஆதலால், இவ்வாறு ஓலைகளை வெட்டி அகற்றுவதால் தென்னைகளின் உற்பத்தித் திறனும் பாதிக்கப்படுகின்றன. எனவே, வெண்ணிற ஈக்களின் தாக்கம் தொடர்பில் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் துறைசார் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம)

## திருச்சி...

அழைத்துச்செல்ல அனுமதிக்கவேண்டும் என்று முருகனின் மனைவி நளினி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் கைது செய்யப்பட் ஏழுபேரும் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டனர். இவர்களில் நால்வரான இலங்கையர்கள் தொடர்ந்தும் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர். திருச்சி சிறப்பு முகாமில் உள்ள மோசமான சூழ்நிலை காரணமாக நோயாளியாகிப் போன சாந்தன் அண்மையில் உயிரிழந்த நிலையில், முருகன் லண்டனுக்குச் செல்வதற்கு ஏதுவாக கடவுச்சீட்டு பெறுவதற்காக அவரை இலங்கைத் தூதரகத்துக்கு அழைத்துச் செல்லுமாறு உத்தர விடவேண்டும் என்று தனது மனுவில் நளினி கோரிக்கை விடுத்துள்ளார்.

முருகன் தூதரகத்துக்குச் சென்றுவருவதற்காக அவருக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் நளினி தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் எமது புடைவைக் காட்சியறைக்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்கள் தேவை.

01. Digital Marketing Assistant -01
02. ஆண், பெண் விற்பனையாளர்கள்.

தொடர்பு: 077 855 4840

## தேவை

கட்டட நிர்மாணத்துறைக்கு பெயின்ரர் (Painter) தேவை.

தொடர்பு:- 076 760 0403

(CS/24028) J-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறை பிரதான (AB21) வீதியில் காங்கேசன்துறை வெளிச்ச வீட்டிலிருந்து 150m தூரத்தில் K.K.S துறைமுகத்தை நோக்கி இரண்டரை (2 1/2) நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CS/54278) J-1

077 304 9820, 077 312 6445


# இலங்கையில் 6,200,000 தெருநாய்கள்!

கொழும்பு, மார்ச் 8
இலங்கையில் 62 இலட்சம் தெருநாய்கள் உள்ளன என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் 62 இலட்சம் என்றிருக்கும் தெரு நாய்களின் எண்ணிக்கை மிகவும் அச்சமூட்டுகின்றது. இது சுற்றுலாத்துறையில் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. சுற்றுலாப் பிரதேசங்களில் தெருநாய்களின் தொல்லைகள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. எனவே இது தொடர்பில் தீர்வு காணப்படவேண்டும் -என்றார். (அ-ம)

## பதில்...

மாவட்டச் செயலர் நியமனத்துக்கான கடிதம் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனால் மருதலிங்கம் பிரதீபனுக்கு வழங்கப்பட்டது. (அ-ம-125-20)

## திடீரென...

கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரியவினைத் தொடர்பு கொண்டு கேட்டபொழுது "கடற்படை முகாம் அற்ற பகுதியில் இருந்த புத்தர் சிலை பொதுமக்கள் மற்றும் மீனவர்களிடையே ஏற்பட்டுள்ள முரணான நிலையைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாக அகற்றப்பட்டுள்ளது. கடற்படையினர் தமது கடற்படை முகாமினுள் தற்பொழுது புத்தர் சிலையினை வழிபாட்டுக்கு எடுத்துச் சென்றுள்ளனர். எதிர்காலத்தில் குறித்த பகுதியில் விகாரையை அமைப்பது தொடர்பில் எமக்கு எதுவித நோக்கமும் இல்லை. மக்கள் நடமாடும் கடற்படை முகாமற்ற பகுதியில் புத்தர் சிலையினை வைக்கவேண்டிய தேவை எமக்குக் கிடையாது. போர்க் காலத்தில் கடற்படை முகாமாக இருந்த அடிப்படையில் வழிபாட்டுக்கு வைக்கப்பட்டிருந்தது எனவும் மக்கள் அச்சமடையத் தேவையில்லை கடற்படைக்கு பௌத்த விகாரைகளை அமைப்பதற்கு மேலாக பல பணிகள் இருக்கின்றன. எனினும் இது மக்களிடையே தேவையற்ற சர்ச்சையை ஏற்படுத்துமென ஊடகங்களில் வெளியான தகவல் எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து, அந்தப் புத்தர் சிலை அகற்றப்பட்டுள்ளது" என அவர் தெரிவித்தார்.

குறித்த புத்தர் சிலை விவகாரத்தை 'உதயன்' பத்திரிகையே முதலில் வெளிக்கொணர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125-66)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் காட்டுக் கந்தோர் வீதியில் A9 வீதியில் இருந்து 300 மீற்றர் தொலைவில்

1 வெட்டுக்கிணறுடன் கூடிய 7 பரப்புக் காணி விற்பனைக்கு.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:-
சாந்தி: 075 432 2011,
ரூபன் : 077 654 4677

(CS/54284) J-1


## சென். ஜோன்ஸ்...

கல்லூரி அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. சகாதேவன் சயந்தன் அதிகபட்சமாக 55 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் அருள் சீலன் கவிசன் 5 விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ்கல்லூரி அணி நாள் முடிவில் இரண்டு விக்கெட்களை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அதிகபட்சமாக உதயனன் அபிஜோய்சாந் 39 ஓட்டங்களையும், அண்டர்சன் சச்சின் கணபதி 36 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)



## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்
14
.
02
.
1960

மறைவு
07
.
02
.
2024



அமரர் ஆழ்வாப்பிள்ளை சிறிகுமார்
(மெக்கானிக்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (08.03.2024) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்த கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.


மனைவி, பிள்ளை,
சகோதரர்கள்.

(CS/54281) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
02
.
08
.
1941

மறைவு
06
.
03
.
2024



அமரர் மயில்வாகனம் பாலசுப்பிரமணியம் (V.M.பாலு)

யாழ். பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை, ஓமான், இந்தியா, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் (06.03.2024) புதன்கிழமை அன்று பிரித்தானியாவில் காலமானார்.

அன்னார் மயில்வாகனம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், கந்தவனம் - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், கனகரத்தினதேவி (தேவி பாலா) அவர்களின் அன்புக் கணவரும், கனகபாலன் (கிருஷ்ணா - பிரித்தானியா), ஶ்ரீசங்கர் (பிரித்தானியா), ரமேஷ் (பிரகாஷ் - பிரான்ஸ்), பிருந்தா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான வேதநாயகி, இராசநாயகி, ஜெகநாயகி, மற்றும் தங்கநாயகி (பிரித்தானியா), காலஞ்சென்ற ஜெகநாதன், யோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பவானி (பிரித்தானியா), பிரியதாரணி (பிரித்தானியா), கீர்த்தனா (பிரான்ஸ்), கோபிநாத் ஆகியோரின் அன்பு மாமனாரும், சரோஜினிதேவி (பிரான்ஸ்), கனகரத்தினராஜா (ரவி - பிரித்தானியா), சிறிஸ்கந்தராஜா (சிறி - கனடா), புவிராஜா (புவி - கனடா), சாந்தினி (கனடா), காலஞ்சென்ற குமுதினி, நந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கீர்த்தி, கயூரன், லஷ்வின், ஹீஷா, தக்ஷன், தாரகன், ஹயானி, வித்திக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவிபாலா +94774456369, சங்கர் +447960633579
ரவி +447930393945, ரமேஷ் +33685668277
கிருஷ்ணா +447846286202, பிருந்தா +61410100251

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 42074) S-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org